විදුලිබල හා බලශක්ති අමාත්‍යාංශය

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

MINISTRY OF POWER AND ENERGY

අංක:80, ශ්‍රීමත් අර්නස්ට් ද සිල්වා මාවත, කොළඹ 07 | இல: 80, சேர். ஏர்னஸ்ட்டிசில்வாமாவத்தை, கொழும்பு07 | No: 80, Sir Ernest De Silva My Colombo 07


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எனதுஇல / My No | MOPE/SEC/COM/2022 | ඔබේ අංකය / உமது இல / Your No | | දිනය / திகதி / Date | 2022.07.25 |

## <u>வெகுசன ஊடக வெளியீடு</u>

இலங்கை பூராகவும் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியின் பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம் யூலை 26 ஆம் திகதி அமுல்படுத்தப்படும். இம் முறையின் மூலம் வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருளை நிரப்ப முடியும். வசதிகள் அற்ற அல்லது தொழிநுட்ப கோளாறுகள் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் மற்றும் எரிபொருள் ஒதுக்கீட்டின் அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படும். 60% மான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இவ் வசதிகள் வழங்கப்பட்டுள்ளதோடு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டும் உள்ளடன் முன்னுரிமை அடிப்படையில எரிபொருட்களும் விநியோகிகப்பட்டுள்ளது. 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் QR வசதிகளுடன் மட்டும் உடனடியாக எரிபொருள் விநியோகத்தை மிகவும் கண்டிப்பாக செயற்படுத்துமாறு அனைத்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி உரிமையாளர்களிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையின் கீழ் அனைத்து பொதுமக்களையும் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்வதோடு ஆரம்ப கட்டத்தில் இவ் முறையினை முறையாக செயற்படுத்துவதற்கு பொதுமக்களாகிய உங்கள் உளமார்ந்த ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

வார இறுதிக்குள் வணிக நோக்கம் கொண்ட் மற்றும் அரச நிறுவனங்களின் பல வாகனங்களை பதிவுசெய்வதற்கு பல தெரிவுகள் வழங்கப்படும். மின்பிறப்பாக்கி, வீட்டுத்தோட்ட உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான பதிவினை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்படும். பொலிஸ் திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு முச்சக்கர வண்டிகளை பதிவுசெய்வதற்கான வழிமுறைகள் வழங்கப்படுவதோடு ஒவ்வொரு முச்சக்கர வண்டிக்குமான எரிபொருள் குறித்த ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே வழங்கப்படும்.

பேருந்துகளை பதிவு செய்வதற்கான வழிமுறைகள் போக்குவரத்து அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு இவற்றுக்கான எரிபொருள் அதன் டிப்போ ஊடாகவோ அல்லது எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாகவோ வழங்கப்படும். ஏனைய சேவைகளான சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை, கைத்தொழில் மற்றும் ஏனைய சேவைகளுக்கு தேவையான எரிபொருள் அதன் தேவைகளை பொறுத்து அத் தொழிற்துறைகளின் வாகனங்களை பதிவுசெய்வதற்கான வழிமுறைகள் அவ் அவ் தொழிற்துறைகளுக்கு வழங்கப்படும்.

ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் QR கோட்டா அடிப்படையிலான முறை அமுல்படுத்தப்படுவதோடு வாகன இறுதி இலக்க முறைகள் மற்றும் ஏனைய முறைகள் செல்லுபடியற்றதாகும்.

மேலும், அடுத்துவரும் 10 நாட்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இவ் திட்டத்திற்கு தேசிய இளைஞர் சேவை மன்ற உறுப்பினர்கள், தேசிய இளைஞர் படையணி மற்றும் தொண்டர் அமைப்புக்கள் உதவிபுரிவார்கள்.


ගරු අමාත්‍යතුමා / கௌரவஅமைச்சர் / Hon. Minister — Tel (+94)-11-2370031, Fax - (+94)-11-2375171

ලේකම් / செயலாளர் / Secretary — Tel (+94)-11-2370115, Fax - (+94)-11-2372115

අමාත්‍යාංශය / அமைச்சு / Ministry — Tel (+94)-11-2370032, Tel (+94)-11-2370033, Fax- (+94)-11-2375163

වෙබ් අඩවිය / இணையதளம் / Website — www.energymin.gov.lk